**வரையறுத்த இலங்கை சலுசல கம்பனியின் 2022 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 13 ஆண்டுகள் காலப்பகுதிக்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை**

.......................................................................................... ..........................................................................................

வரையறுத்த இலங்கை சலுசல கம்பனியின் (''கம்பனி'') 2009 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2022 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 13 ஆண்டுகள் காலப்பகுதிக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2009/2010, 2010/2011, 2011/2012, 2012/2013, 2013/2014, 2014/2015, 2015/2016, 2016/2017, 2017/2018,2018/2019, 2019/2020, 2020/2021, 2021/2022 ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையும் சமர்ப்பிக்கப்படவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கருதும் மேற்கூறிய காலப்பகுதிக்கான கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமாக எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.2. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கும் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தினாலும் அந்த கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் சம்பந்தமாக வருடாந்தம் மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான ஏடுகளையும் அறிக்கைகளையும் பேணுதல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் சம்பந்தமான வருடாந்த நிதிக்கூற்றுக்களை சட்டவிதிகளின் மூலம் காட்டக்கூடிய வகையிலான காலப்பகுதிக்குள் அந்த கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காயள்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவைப்படுகின்ற வேளைக்குள் தயாரிக்கப்படுகின்றது என சான்றுபடுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பான ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்புக்கூறுதல் வேண்டும்.

## 1.3 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்தம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுக்காமை மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதியி பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களையும் வரைபு ஆண்டறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கம்பனியால் 2009/2010 ஆம் ஆண்டிலிருந்து 2021/2022 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக 13 கணக்காண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்களும் வரைபு ஆண்டறிக்கைகளும் இந்த அறிக்கைத் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 கம்பனி தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| கம்பனியால் கடைசியாக கணக்காய்விற்குச் சமர்ப்பித்த 2009 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நட்டம் ரூபா 72,829,341 ஆகும். அதற்கு நேரொத்த 2008 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்பகான நட்டம் ரூபா 17,402,986 ஆகும்.<br><br>2022 ஆம் ஆண்டு வரை ஜாவத்தை மற்றும் நுகேகொடயினைத் தவிர்த்து நாடு முழுவதும் அமைந்துள்ள ஏனைய அனைத்து விற்பனை நிலையங்களும் உற்பத்தி தொழிற்சாலைகளும் பயன்படுத்தப்படாதிருந்தன. கடைசியாக கணக்காய்விற்குச் சமர்ப்பித்த 2009 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் தொழிற்படு மூலதனம் ரூபா 407,682,922 இனாலும் தேறிய சொத்துக்கள் ரூபா 467,878,681 இனாலும் மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தன. மேலும் 2016 ஆம் ஆண்டின் போது எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியின் நிரந்தர ஊழியர்களுக்காக சுயமாக ஓய்வுபெறும் இழப்பீட்டுத் திட்டத்தினை அமுல்ப்படுத்தி 194 ஊழியர்கள் ஓய்வு பெற்றிருந்தார்கள். கணக்காய்வுத் திகதி வரை 19 நிரந்தர ஊழியர்களும் நாளாந்த மற்றுடம் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 10 பதவியினர்களும் சேவையில் ஈடுபட்டிருந்தனர். | 2021/2022 ஆம் ஆண்டு வரை பொதத்திறைசேரியின் நிதி ஏற்பாடின்றி முறையான முகாமைத்துத்துடன் இலாபம் ஈட்டப்படுகின்றது. அந்த நிலைமையினை மேலும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. | கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

**2.2** 2008/2009 கணக்காண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பின்வரும் விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள பெறுமதிகள் சம்பந்தமாக 2009/2010 ஆம் கணக்காண்டிலிருந்து 2021/2022 ஆம் கணக்காண்டு வரை அக்கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகளின் உள்ளமை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளிலிருந்து உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| | விடயம் | பெறுமதி (2008/2009 நிதிக் கூற்றுக்களின் பிரகாரம்)<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 24,594,955 | 2009-03-31 ஆந் திகதிய நிலைமையாவதுடன் பின்னைய காலத்தின் பணப் பெறுவனவுகள் மற்றும் ஏனைய துணை | கொடுக்கல் வாங்கனல்கள் மற்றும் உள்ளமையை உறுதிப்படுத்தும் |
| (ஆ) | இறுதி இருப்புக்கள் | 17,892,200 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | காசும் காசுக்கு சமனானவைகளும் | (133,721,396) | ஆவணங்களின் மூலம் இந்நிலைமையை மேலும் உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. | வகையில் ஏடுகள் அறிக்கைகள் மற்றும் பதிவேடுகள் பேணப்படுதல் வேண்டும். |
| (ஈ) | வணிக மற்றும் ஏனைய கடன்பட்டோர் | 24,966,874 | | |
| (உ) | வணிக மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் | 391,513,554 | 1981 ஏப்ரல் 14 ஆந் திகதி இலங்கை சலுசல கம்பனியால் 100 சதவீத உரிமையாண்மையுடன் Lanka Textile and Emporium கம்பனி ஸ்தாபிக்கப்பட்டு ரூபா 7 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தமையும் அக்கம்பனியின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வழங்கிய ரூபா 70,134,234 தொகையுமாகும். தற்பொழுது இக்கம்பனி செயற்பாடற்ற நிலைக்கு மாறியுள்ளது. | கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 487(3) ஆம் பிரிவின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் போது பெயர் பதிவழிக்கப்பட்டுள்ளதனால் சொத்துக்களை தேறச் செய்யும் இயலுமையை கவனித்துப் பார்த்தல் வேண்டும். |
| (ஊ) | குத்தகை வாடகை வருமானம் | 19,170,678 | | |
| (எ) | முதலீடுகள் | 7,000,000 | | |
| (ஏ) | தொடர்புபட்ட தரப்பினரிடமிருந்து கிடைக்க வேண்டியவைகள் | 70,134,234 | | |

**2.3 செத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள்**

2009 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 2008/2009 கணக்காண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| | பெறுமதி ரூபா |
|---|---|
| **சொத்துக்கள்** | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 31,594,965 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 165,312,909 |
| முழுச் சொத்துக்கள் | 196,907,874 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 572,995,831 |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 91,790,725 |
| மூலதனம் மற்றும் ஒதுக்கம் | (467,878,682) |
| முழுப் பொறுப்புக்கள் | 196,907,874 |
| மொத்த இலாபம் | 1,228,565 |
| ஏனைய வருமானங்கள் | 21,180,221 |
| கழிக்குக. | |
| மொத்த செலவுகள் | (95,238,127) |
| ஆண்டிற்கான பற்றாக்குறை | (72,829,341) |

2009 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் மொத்த சொத்துக்களைப் போல மூன்று மடங்கான பொறுப்புக்கள் காணப்பட்டன என்பது அவதானிக்கப்பட்டது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.**

| டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) பிரிவு 131 (1) | ஒரு ஆண்டிற்கு ஒரு தடவை நிர்ணயிக்கப்பட்ட படிவத்திலான ஆண்டறிக்கையானது கம்பனிகள் பதிவாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | இதில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தி எதிர்காலத்தில் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) பிரிவு 170 (1) | கணக்காய்வு அறிக்கைகளுடன் சேர்த்து வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கம்பனிகள் கபதிவாளருக்கு பதிவு செய்தலுக்காக ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | - மேற்படி- |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 5.2.4 ஆம் பந்தி | 13 ஆண்டுகள் தொடர்பாக வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சு, அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 7.4.5 ஆம் பந்தி | கம்பனியின் ஒவ்வொரு பிரிவுகளிலும் பொருள் இருப்பு பதிவேட்டுப் புத்தகத்தை பேணுதல் மற்றும் மீளாய்வுச் சபையை வருடாந்தம் நியமித்து இருப்புக்கள் மற்றும் நிலையான சொத்துக்களை மெய்மையாய்வு செய்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | இருப்புக்கள் மற்றும் நிலையான சொத்துக்களின் மீளாய்வு நடவடிக்கை வருடாந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | 2016 மார்ச் 08 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றிக்கையின் 2 ஆம் பந்தி | சுயவிருப்பில் ஓய்வுபெறுதல் இழப்பீட்டுத் திட்டத்தினை அமுல்படுத்தும் போது மிகையான ஊழியர்கள் ஓய்வுபெற்றதன் பின்னர் துரிதமாக திருத்திய பதவியணியினை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதி தொடர்பாக தயாரிக்கப்படவில்லை. | -மேற்படி- | கூட்டிணைந்த திட்டமும் செயல் நடவடிக்கைத் திட்டமும் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதி தொடர்பாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு | 2011 யூன் மாதத்திலிருந்து 2015 நவம்பர் மாதம் வரையான காலத்திற்காக ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 276,865 மற்றும் இன்னும் 8 உத்தியோகத்தர்களுக்கு 2016 ஆகஸ்ட்டிலிருந்து நவம்பர் வரையான காலத்திற்காக ரூபா 277,991 ஊழியர் சேமலாப பங்களிப்பு பணத்தை உரிய திகதியில் செலுத்தாமையால் 2019 ஆம் ஆண்டின் போது மிகைக் கட்டணமாக ரூபா 252,178 தொகையினை செலுத்தவேண்டியிருந்தது. அவ்வாறே ஊழியர் சேமலாப பங்களிப்பு பணமும் அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு | -மேற்படி- | ஊழியர் சேமலாப பங்களிப்பு பணத்தை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முன்னர் செலுத்த வேண்டிய போதிலும் 2019 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையான காலத்தில் அவ்வாறு கொடுப்பனவு செய்யப்படாத 15 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (ஊ) | 1982 இன் 04 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான மாதாந்த ஊழியர் பங்களிப்பினை அடுத்து வரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமையால் ஆண்டின் போது தண்டப்பணமாக ரூபா 100,589 தொகைபயினை செலுத்த வேண்டியிருந்தது. | -மேற்படி- | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக மாதாந்த ஊழியர் பங்களிப்பினை அடுத்துவரும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

2009/2010 இலிருந்து 2016/2017 வரையான 13 கணக்காண்டு காலப்பகுதிக்காக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சு 2014 ஆம் ஆண்டின் போது தஹம் பாடசாலை ஆசரியர்களுக்கு இலவசமாக சேவைகளை வழங்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 40,000 சாரதிகள் ரூபா 56 மில்லியனுக்கு வழங்கும் கட்டளை பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் அக்கட்டளையை பூரணப்படுத்துவதற்காக பெறுகை நடைமுறை பின்பற்றப்படாது வாய்மொழி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட விலை மனுக்களின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | அனைத்து கொள்வனவுகளும் பெறுகை நடைமுறைகளுக்கு இணங்க செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் முல்லேரியாவில் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடத்திற்கான உரிய குத்தகை வாடகையானது இரண்டு மாதங்களுக்கு மேற்படாத காலம் செலுத்தத் தவறும் பட்சத்தில் உரிய குத்தகை வாடகையில் 25 சதவீதம் தண்டப்பணமாக அறவிடப்படலாம் என குத்தகை உடன்படிக்கையின் 5 ஆம் பிரிவில் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016/17 கணக்காண்டிற்காக குத்தகை செலுத்தத் தாமதித்ததன் அடிப்படையில் அறவிட வேண்டியிருந்த ரூபா 266,200 தண்டப் பணத்தை அறவீடு செய்தல் மற்றும் காணி கட்டிடங்களை குத்தகைக்கு வழங்கும் போது அரசாங்கத்தின் மதிப்பீட்டினைப் பெற்று குத்தகையினை தீர்மானித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அரசாங்கத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை தீர்மானிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2012 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 12/1523/553/020 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு இணங்க கம்பனியின் உனவடுவனவில் அமைந்துள்ள காணியும் கட்டிடங்களையும் லக்சல நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்கும் அதில் சேவையாற்றுகின்ற 13 நபர்களை ஓய்வு பெறச் செய்வதற்கும் அதற்காக செலவாகும் ரூபா 15.25 மில்லியன் செலவினை லக்சல நிறுவனத்தினால் மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அப்பணம் லக்சல நிறுவனத்தினால் 2012 திசெம்பர் 12 ஆந் திகதி அரசாங்க வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தும் உரிய ஆதனம் லக்சல நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் அத்திகதியே ஊழியர்கள் ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை தாமதித்ததன் காரணமாக அக்காலப்பகுதிக்காக ரூபா 13,406,580 சம்பளமாகச் செலுத்தப்பட்டது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சட்டரீதியாக ஒப்படைப்பதற்கு மிகவும் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஆதனங்களை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2013 ஒக்தொபர் 25 ஆந் திகதிய அமைப 13/1459/553/012 ஆம் இலக்க அமைச்டசரவை தீர்மானத்தின் மூலம் கம்பனியின் இரத்மலானை தெலவல வீதியில் அமைந்துள்ள காணி அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் விசேட அதிரடிப்படை முகாமினை தோற்றுவிப்பதற்காக சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சிற்கு ஒப்படைப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும் கட்டிடங்களுடனான 05 காணிகள் பல்வேறு அமைசசுக்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஒப்படைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் சட்டரீதியாக ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | இதனைச் செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சுயவிருப்பில் ஓய்வுபெறும் நடவடிக்கைக்காக கைத்தொழில் மற்றும் வணிக நடவடிக்கைகள் அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 299,159,745 பணத்தில் வரையறுத்த லங்கா சலுசல கம்பனியின் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் கம்பனியை செயற்படுத்தும் நடவடிக்கைகளுக்காகவும் ரூபா 2,642,906 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | சுயவிருப்பில் ஓய்வு பெறும் நடவடிக்கைகளிலிருந்து மிகுதிப் பணத்தை வேறு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு முன்னர் அதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஊ) | 2013 செப்தெம்பர் 11 ஆந் திகதிய 2/2013 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றிக்கையின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்தம் கணிப்பீடு செய்யப்பட்ட பணிக்கொடையினை ஒதுக்கீடு செய்வதற்காக உரிய பணம் முறைப்படியாக கணக்கில் வைப்புச் செய்யப்பட | நிறுவனத்தில் காணப்பட்ட சிறப்பற்ற நிதி நிலைமையின் அடிப்படையில் இச்சட்டரீதியான | வருடாந்தம் கணிப்பீடு செய்யப்பட்ட பணிக்கொடையினை ஒதுக்கீடு செய்வதற்காக உரிய |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியதுடன் ஒரு ஊழியர் பணிக்கொடையினை பெற்றுக்கொள்வதற்கு தகைமைபெற்ற பின்னர் முடியுமான அளவு விரைவாக உரிய பணம் அவருக்கு வழங்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அவ்வாறு செய்யப்படாமையின் காரணமாக 2021/2022 ஆம் ஆண்டின் போது மிகைக் கட்டணமாக ரூபா 224,739 செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவு தாமதிக்கப்பட்டதுடன் பின்னர் நீதிமன்றத்திலிருந்து கிடைத்த கட்டளையின் அடிப்படையில் இக்கொடுப்பனவு செய்யப்பட்டது. | பணத்தை முறைப்படியாக ஒரு கணக்கில் வைப்புச் செய்தல் வேண்டும். |
| (ஈ) | 2008 ஆம் ஆண்டின் போது 30 ஆண்டுகள் குத்தகை காலப்பகுதிக்கு உட்பட்டு காலி உனவடுன உற்பத்தி நிறுவனம் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக இருதரப்பினர்களும் இணங்கிக் கொண்ட குத்தகை உடன்படிக்கை கம்பனியால் மீறப்பட்டதனால் அந்நபருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழங்கின் பிரகாரம் முறைப்பாட்டாளரினால் வைக்கப்பட்டிருந்த ரூபா 750,000 தொகையான பாதுகாப்பு வைப்புக்கள் மற்றும் ரூபா 1,141,400 சேமிப்புக்களுடன் ரூபா 1,891,400 மொத்த தொகை செலுத்த வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் ரூபா 1,357,500 தொகைக்கு இரு தரப்பினர்களும் இணங்கிக்கொண்டு 2017 செப்தெம்பரிலிருந்து 2019 பெப்ரவரி வரை பகுதிபகுதியாக ரூபா 600,000 மொத்த தொகை செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும் மிகுதிப் பணத்தை 8 மாத காலத்திற்குள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் மீண்டும் ரூபா 1,891,400 பணத்தை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக ஏற்கனவே செலுத்தப்பட்ட பகுதிப் பணம் ரூபா 600,000 தாமதக் கட்டணம் ரூபா 65,000 மற்றும் அழைப்பாணையை அமுல்ப்படுத்தும் கட்டணமாக ரூபா 202,750 என்பனவாக அறவீடு செய்தலினால் ரூபா 802,968 மிகையாக செலுத்துதல் இடம்பெற்றிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | உடன்படிக்கை செய்து கொள்வதற்கு முன்னர் அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் கவனித்துப் பார்த்தல் வேண்டும். |
| (ஏ) | பிரதான களஞ்சியத்தின் புடவை இருப்பு சம்பந்தமாக இருப்புக்களைப் பெறுதல் மற்றும் வழங்குதலினை அடிப்படையாகக் கொண்டு இருப்பு பதிவேடு 2017 இலிருந்து 2022 ஒக்தோபர் வரை பேணப்படாதிருந்ததுடன் பெறுவனவுகளும் வழங்குதல்களும் தனித்தனியாக இரண்டு பதிவேடுகளில் முறையற்றவகையில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதனால் அப்பதிவேட்டினை அடிப்படையாகக் கொண்டு இருப்புப் பதிவேட்டினை நாளதுவரையாக்க முடியாது என்பது அவதானிக்கப்பட்டது. எனவே களஞ்சியத்தில் காணப்படுகின்ற ஒவ்வொரு இருப்பு விடயங்களினதும் புத்தக மீதியினைப் பெற்றுக்கொள்ள முடியாததனால் பௌதீக மீதியினை சரியாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. | இதற்காக தற்பொழுது பொருள் பெறுவனவுப் பத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டு இருப்பு பதிவேடு முறைப்படியாக பேணப்படுவதுடன் மேலும் இப்பலவீனத்தினை தவிர்த்துக்கொள்வதற்காக கணனி மென்பொருளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. | களஞ்சியத்தில் காணப்படுகின்ற ஒவ்வொரு இருப்பு விடயங்களினதும் புத்தக மீதியினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருப்பு பதிவேட்டினைப் பேணுதல் வேண்டும். |

## 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சலுசல கம்பனியின் 24 விற்பனை நிலையங்கள் மற்றும் உற்பத்தி தொழிற்சாலை நிலையங்களில் 07 நிலையங்களில் காணப்பட்ட 9 கட்டிடங்கள் அமைந்துள்ள மொத்தமாக 4 ரூட் 103.74 பேச்சர்ஸ் காணிகள் எதுவித வினைத்திறனான நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படாது குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டன. | நிறுவனத்தின் தொழிற்படுமுதல் சிக்கல் நிலைக்கு உள்ளாகியுள்ளதன் காரணமாக பல சொத்துக்கள் குறைந்த பயன்பாட்டு நிலைக்கு மாறியுள்ளது. இச்சொத்துக்களை முறைப்படியாக பயன்படுத்துவதற்காக தனியார் தரப்பினர்களின் உதவியுடன் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்து செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது. | காணி கட்டிடங்களை வினைத்திறனாக ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கில் ரூபா 5 மில்லியனிலிருந்து ரூபா 13 மில்லியன் வரையான வீச்சுடைய மீதி 2021 ஒக்தோபரிலிருந்து 2022 மார்ச் வரை தொடர்ச்சியாக ஆறு மாத காலம் முழுவதும் காணப்பட்டதுடன் அப்பணத்தை வினைத்திறனாக குறுங்கால முதலீட்டில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கி நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட மிகைப் பணத்தை குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்குரிய பணிப்பாளர் சபை அங்கீகாரம் தற்பொழுது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | பணத்தை வினைத்திறனாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 04. முறைமைகளும் கடப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | முறைப்படியான நிதிக்கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்படாமை வரி மற்றும் கடன் போன்ற அத்தியவசியமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாமை, பணப் பெறுவனவுகளும் பணக் கொடுப்பனவுகளையும் அறிக்கையிடும் போது காசேடுகள் பேணப்படாமை, கட்டுப்பாட்டுக் கணக்குகளும் கணக்கிணக்கங்களும் செய்யப்படாமை என்பவற்றினால் அவற்றின் சரியான தன்மையையும் முழுமைத்தன்மையையும் பரீட்சிக்க முடியாதுள்ளது. | பராமரிக்க வேண்டிய பதிவேடுகளை பராமரிப்பதற்கும் மீளாய்வுச் சபையை நியமித்து மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஏனைய முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் மேம்படுத்த வேண்டிய துறைகள் எவை என்பதனை அடையாளங்கண்டு கொள்வதற்கும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டள்ளன. | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படாமை, மீளாய்வுச் சபையை நியமித்து சொத்துக்கள் மீளாய்வு செய்யப்படாமை மற்றும் உற்பத்திச் சாலைகள் மற்றும் விற்பனை நிலையங்கள் உள்ளடங்கலாக அனைத்து காணிகளும் மீள் மதிப்புச் செய்யப்படாமை | -மேற்படி |
| (இ) | அறவிட வேண்டிய கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையும் அது தொடர்பான அறிக்கைகளை முறைப்படியாகவும் விபரமாகவும் பேணப்படாமையும். | -மேற்படி- |